**PERTUBUHAN HINDHUDHARMA MALAYSIA**
மலேசிய இந்து தர்ம மாமன்றம்
MALAYSIA HINDHUDHARMA MAMANDRAM
ஒன்றே குலம் – ஒருவனே தேவன் – அன்பே தெய்வம்
அன்பு – அழகு – அறிம் – அறிவு – அருள்
Love - Beauty - Dharma - Knowledge - Grace
No. Berdaftar 3212/82

07 ஏப்ரல் 2011

**மலேசிய இந்துதர்ம மாமன்ற தேசியத் தலைவரின்**
**சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துச் செய்தி**

அனைவருக்கும் கர ஆண்டு சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துகளை மலேசிய இந்துதர்ம மாமன்றத்தின் சார்பில் தெரிவித்துக் கொள்வதாக அதன் தேசியத் தலைவர் பேராசிரியர் முனைவர் என்.எஸ்.இராஜேந்திரன் குறிப்பிட்டார். எல்லாம் வல்ல இறைவன் அனைவருக்கும் அருள் பாலித்திடவும் அனைவரும் எல்லா நலன்களையும் பெற்று நல்லாரோக்கியத்துடன் வாழ்ந்திடவும் இந்நன்னாளில் பிராத்திப்பதாகக் கூறினார்.

மலர்ந்துள்ள இந்தப் புத்தாண்டில், நாம் நம் ஆற்றல்களை உணர்ந்து, நம் எதிர்காலத்திற்காகத் திட்டமிட்டு, தொடர்ந்து முனைப்புடன் செயல்பட்டு வெற்றியடைய உறுதிகொள்ள வேண்டும். சவால்கள் நிறைந்த இவ்வுலகில் நாம் முயற்சியை மூலதனமாக்கி தொடர்ந்து முனைப்புடன் செயல்படாவிடில் நாம் பிந்தங்கி விடுவோம். உண்மையாக உழைப்பவர்களுக்கு இறைவனின் திருவருள் நிச்சயம் கிட்டும்.

இந்நன்னாளில் இந்நாட்டு இந்தியர்கள் நாட்டின் எதிர்காலத்திற்காகவும், தங்களின் மொழி, சமயம் மற்றும் பண்பாடு தொடர்ந்து பாதுகாக்கப் படுவதற்காகவும் ஒன்றுபட உறுதி எடுத்துக் கொள்ளவேண்டும். இன்று பல்வேறு காரணங்களுக்காக இந்தியர்கள் பல்வேறு பிரிவினராகப் பிரிந்துகிடப்பது மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது. இதற்கு விரைவில் தீர்வு காணப்பட வேண்டும். பிறந்திருக்கும் கர ஆண்டு இதற்கு வழி வகுக்கும் என்று பெரிதும் எதிர்பார்க்கிறேன்.

நம் செயல்களுக்கு நாமே பொறுப்பு. நாம் செய்யவேண்டிய கடமைகளை செய்யத் தவறினாலும் அதற்கும் நாமே பொறுப்பேற்க வேண்டும். இன்று நிலவும் இந்நிலையை சீர் செய்ய நம் பங்கிற்கு எதாவது சிறிய அளவிளாவது நம் பங்களிப்பைச் செய்வோமே. இந்நாட்டு இந்தியர்கள் ஒன்றுபட்டு செயல்பட்டால், நாட்டின் வளர்ச்சிக்குப் பங்களிப்பதோடு, நம் மொழி, சமயம் மற்றும் பண்பாடு இந்நாட்டில் எதிர்வரும் காலத்திலும் பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்யமுடியும்.

அனைவருக்கும் கர ஆண்டு சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வதாக பேராசிரியர் முனைவர் என்.எஸ்.இராஜேந்திரன் குறிப்பிட்டார்

**அன்புடன்,**

**(பேராசிரியர் முனைவர் என்.எஸ்.இராஜேந்திரன்)**

**Alamat :61-G, Pearl Court, Jalan Tamby Abdullah, 50470 Brickfields, Kuala Lumpur**
**No. 61-2, Jalan SBC 1, Taman Sri Batu Caves, 68100 Batu Caves, Selangor**
**Tel:** 019-3994735/013-3973134 **Email:** nsrajendran@hotmail.com **http**://www.mamandram.org